# 19 நாட்டார் வழிபாடு

## அ. கண்ணகியம்மன் சடங்கு

சமயத்தின் கருப்பொருளாகக் கருதப்படுவன சடங்குகளாகும். புனிதத் தன்மையின்பால் மக்கள் மேற்கொள்ளும் நடத்தைக் கோலங்களின் தொகுப்பாகவும் புனிதத்தன்மையோடு தொடர்புகொள்ள மேற்கொள்ளப்படும் முறையான செயல் முறைகளாகவும் இவை கருதப்படுகின்றன. புனிதத்தன்மையைப் பாதுகாக்கவும் அதற்குக் களங்கம் ஏற்படாமலிருக்கவும் இச்சடங்குகள் மேற்கொள்ளப்படுகின்றன. இவை மனித வாழ்க்கையில் பிறப்புத் தொடக்கம் இறப்புவரை நிகழ்த்தப்படுகின்றன. சடங்கில்லாமல் வாழ முடியாத நிலையும் ஏற்பட்டுவிட்டது. மனித வாழ்க்கைக்கு அப்பால் மக்கள், இறைவன் என்னும் பெயரால் மனித உருவமாக்கியோ, மனித உணர்வுகளாக்கியோ வழிபட முற்படுவதால் இறைவனுக்கும் மனமுண்டு என எண்ணி, இறைவனின் மனத்தை நிறைவு செய்யும் பொருட்டு மேற்கொள்ளப்பட்ட செயல்களும் சடங்குகளாகின்றன. சடங்குகள், பங்கு பெறுவோர் அனைவரையும் ஒன்றுபட வைக்கிறது. மக்களை இணக்கமுறவும் ஒன்றுபடவும் கருத்து வேறுபாடு களை மறைக்கவும் உதவுகின்றன. ஓர் இனத்தின் பண்பாட்டுக்கோலமாகக் கருதப்படும் இச் சடங்குகள் பழந்தமிழ் நூல்களிலும் வேதங்களிலும் இவை விபரிக்கப்பட்டுள்ளன. வாழ்க்கையுடன் இணைந்த சடங்குகள் என்றவகையில் சமயச்சடங்குகள் பிறப்புச் சம்பந்தமான சடங்குகள், திருமணச் சடங்குகள், வேளாண்மைச் சடங்குகள், ஈமச் சடங்குகள், பிற சடங்குகள், எனப் பலதரப்பட்டனவாகும். இவற்றுள் சமயச் சடங்கிற்குள் அடங்கும் கண்ணகியம்மன் சடங்கு பற்றிக் கற்போம்.

நாட்டார் தெய்வ வழிபாடுகளுள் சடங்குகள் உள்ளடங்குகின்றன. மேல் நிலையாக்கம் பெற்ற கோயில்களில் நிகழும் சமயம் தோற்றிய பின், அதனுடன் இணைந்து சில சடங்குகள் காணப்பட்டன. அச்சடங்குகள் மந்திரச் சமயங்கள் என அழைக்கப்பட்டன. மேல் நிலையாக்கம் பெற்ற கோயில்களில் நிகழும் சடங்குகள் மந்திரத் தன்மை குறைந்த சடங்குகளாகும். இங்கே அர்ச்சகர் சடங்குகளை நடத்துபவர்களாகவும் பக்தர்கள் பார்வையாளர்களாகவும் காணப்படுவர். ஆனால் நாட்டார் தெய்வவழிபாட்டில் மக்களின் நேரடியான பங்களிப்பைக் காண முடியும். நாட்டார் தெய்வ வழிபாட்டின் போது பண்டம் எடுத்தல், மடை பரவுதல், தூளி பிடித்தல், பரிகலம் அழைத்தல், கதவு திறத்தல், சந்தனக்காப்பிடல், பலியிடுதல், கலையாடுதல், சூனியம் வெட்டுதல், கட்டாடுதல் (கச்சு நேருதல்) உருவம் நேர்ந்து விடல், தீப்பந்தம் ஏறுதல், வழிபடுதல், சொற்பொழிவு போன்றன நிகழும். இவை பொதுவாக நாட்டார் தெய்வ வழிபாட்டுடன் இணைந்தனவாகும். இச்சடங்குகளுடன் வேறு பல சடங்குகளும் இணைந்தது கண்ணகியம்மன் சடங்காகும்.

சடங்கை அடிப்படையாகக் கொண்டு கிராமிய தெய்வங்கள் வழிபடப்படுகின்றன. காளி, மாரி, பேச்சி, கடலாட்சி பிடாரி, வராகி, கொத்தி, கண்ணகி, நாச்சிமார், சப்தகன்னியர், சீதை, திரௌபதி என்பன குறிப்பிடத்தக்க பெண் தெய்வங்களாகும். இவற்றுள் கண்ணகியம்மன் தமிழகத்திலிருந்து முதலாம் கஜபாகு மன்னனால் இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டதாக, கண்ணகி வழிபாடு, மட்டக்களப்புத்தமிழகம் போன்ற தமிழ் நூல்களும், பத்தினி கத்தாவ, பத்தினி ஹல்ல இராஜவலிய, இராஜரத்தினாகா கஜபாகத்தாவ போன்ற சிங்கள நூல்களும் தெரிவிக்கின்றன. எனினும் இலங்கையின் கண்ணகி வழிபாட்டின் தொன்மைக்கு 'சகவீரனின் கண்ணகி வழக்குரையே' ஆதாரமாகின்றது. எனவே சிங்களவர், தமிழ் மக்களிடையே வேறுபாடின்றி ஊறிய கிராமிய வழிபாடாக இவ்வழிபாடு திகழ்கிறது.

கண்ணகியம்மனுக்கான கோயில்கள் பரந்துபட்டளவில் காணப்பட்டாலும். சிறப்பாக மட்டக்களப்பில் இவ்வழிபாடு சிறப்புப் பெற்றுக்காணப்படுவதற்கு அங்குள்ள ஆலயங்கள் சான்றாகும். ஆதலால் இலங்கையில் மட்டுமே கண்ணகியம்மன் வழிபாடு தனித்துவத்துடன் காணப்படுகிறது. வடக்கிலும் கிழக்கிலும் கண்ணகியம்மன் என்ற பெயரால் வழிபடப்படுகிறாள். சிங்கள பௌத்த மக்களிடையே சிறப்பாக மத்திய மாகாணம் (கண்டி, நாவலப்பிட்டிய, குருணாகல் கடுகம்பறைப்பற்று) தென்மாகாணம் போன்ற பகுதிகளில் பத்தினித் தெய்வமாக வழிபடப்படுகின்றார். இப்பௌத்த மக்கள் பதினேழு நாட்கள் பத்தினிப் பெண்ணை பூசை செய்து வழிபடுவர்.

இலங்கையின் வட பகுதியில் கந்தரோடை கயற்கன்னி ஆலயம், அங்கணாங்கடவை கண்ணகி ஆலயம், சுதுமலை கண்ணகியம்மன் ஆலயம், அளவட்டி கண்ணகியம்மன், மந்திகை கண்ணகியம்மன் ஆலயம், புங்குடுதீவு கண்ணகியம்மன் ஆலயம் வற்றாப்பளை கண்ணகியம்மன் ஆலயம், செட்டிகுளம் கண்ணகியம்மன் ஆலயம், சுட்டிபுரம் கண்ணகியம்மன் ஆலயம், பொறிகடவை கண்ணகியம்மன் ஆலயம், என்பன குறிப்படத்தக்கனவாகும்.

அமிர்தகளி, ஆரையம்பதி, ஈச்சந்தீவு, கல்லாறு, செட்டிபாளையம், குருக்கள்மடம், தம்புலுவில், காரைதீவு தாண்டவன் வெறி, தாளங்குடா, துறைநீலாவனை, களுதாவளை, சந்துருக் கொண்டான், நாவற்கேணி கற்குடா, பாண்டிருப்பு, வவுணதீவு, முனைக்காடு, வவுணதீவு வீரமுனை, பழுகாமம், பட்டியச் சோலை, கிரான் குளம் பெரிய போரதீவு, தேற்றாத்தீவு போன்ற இடங்களில் கண்ணகியம்மனுக்கான ஆலயங்கள் காணப்படுகின்றன.

இவ்வாறான கண்ணகி ஆலயங்களின் வழிபாட்டு மரபுகள் பெரும்பாலும் வைகாசி மாதத்தில் இடம் பெறும். பொங்கலுக்குச் சில நாட்களுக்கு முன், கோயில் திறந்து கண்ணகியம்மன் கதை படிப்பர். அன்றே மக்கள் தங்கள் குடும்பங்களோடு கோயிலுக்கு வந்து புதுச்சட்டி பானையிலே பொங்கல் பொங்குவர். காவடிகளும், தொகை தொகையாகக் கோயிலுக்கு வந்து சேரும். பின் பூசை நடக்கும். கண் நோயுற்றோர்

அது மாறுவதற்காக நேர்த்திக் கடன் பண்ணி, வெள்ளியால் கண்மடல் செய்து கொடுப்பர். கோயில்களில் பறை மேளம் அடிக்கப்படும். மட்டக்களப்புப் பகுதியில் சிறப்பாக நடைபெறும் இவ்வழிபாட்டு மரபுகள் இன்று வளர்ச்சியடைந்த நிலையில் காணப்படுகின்றன. அதனடிப்படையில் பிரசித்தி பெற்ற காரைதீவு கண்ணகியம்மன் ஆலயம், வற்றாப்பளை கண்ணகியம்மன் ஆலயம் ஆகியவற்றின் சடங்குகள் பற்றிக் கற்கின்றபோது பிரதேச ரீதியான கண்ணகியம்மன் வழிபாட்டுச் சடங்குகளை தெரிந்தவர்களாவோம்.

காரைதீவு கண்ணகியம்மன் ஆலயம் பல வருடங்களுக்கு முன் புனரமைப்புச் செய்யப்பட்டுக் கும்பாபிஷேகம் நிகழ்த்தப்பட்டது. பூசை, அபிஷேகம், திருவிழாக்கள் ஒழுங்காகப் பிராமணர்களால் நடத்தப்பட்டு வருகிறது. எனினும் இக்கோயில் கண்ணகியம்மனுக்கும் உரிய இடமளித்துள்ளது என்பதை வைகாசி மாதத்திலே நிகழுகின்ற சடங்கு முதலியவற்றிலிருந்து அறிய முடிகிறது. ஏனைய கண்ணகியம்மன் கோயில்களில் குளுத்தி வைபவம் வைகாசிப் பூரணையன்றே நடைபெறுவதைக் காண முடியும். வைகாசித் திங்கள் வருவேனென்று கண்ணகி திருவாய் மலர்ந்துள்ளார் என்பதில், திங்கள் என்பதை சந்திரன் - பூரணைச் சந்திரன் என்பதைக் கொண்டு இப்பிரதேச மக்கள் குளுத்தி பாடிச்சடங்கை முடிப்பதாக அறிகிறோம். ஆனால் திங்கள் என்பதை திங்கட்கிழமை எனக் கொண்டு வைகாசிப் பூரணையை யொட்டிய திங்கட்கிழமையிலேயே குளுத்தி பாடிச் சடங்கினை நிறைவு செய்யும் வழக்கம் இக்கோயிலிலே நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திங்கட் கிழமைக்கு முந்திய எட்டு நாட் பூசையும் குளுத்தியும் மட்டும் கப்புகன்மாரால் நடாத்தப் பெறுகின்றது. இச்சடங்குக் காலத்தில் கண்ணகி வழக்குரைகாதை படிக்கப்படுவதையும் மக்கள் மிகுந்த பயபக்தியுடன் இருந்து கேட்பதையும் காணமுடியும். இவ்வழக்குரை காதை படிக்கப்படும் அன்று, இங்கு நடைபெறும் பூசை முறையும் அதற்காக கையாளும் ஓசையும் மிகவும் அமைதியான சூழ்நிலையும் பார்ப்போருக்கும் கேட்போருக்கும் மிக அச்சத்தினையும், பயத்தினையும் ஏற்படுத்தும் அநீதியான முறையில்தான் கோவலன் வெட்டுண்டான் என்பதை உணர்த்தவே இந்த அச்சமும் பயமும் ஏற்படுவதாகக் கருதலாம். அன்றைய பூசையில், முதலில் உரிமைக் குடிகளுக்கு அமுது உள்ளிட்ட சிறுகுடுக்கைகள், முட்டிகள் கொடுக்கப்படும்.

கப்புகன்மாரால் நடத்தப்பெறும் இவ்வெட்டுநாட் சடங்கின்போதும் உடுக்குச்சிந்து என்று சொல்லப்படும் ஊர்ச் சுற்றுக் காவியம் முதலான காவியப்பாடல்கள் பாடப்படுவதையும் அவற்றிற்குப் பொருத்தமான வகையில் நிலத்தில் வைத்து மூவரால் அடிக்கப்படும் பெரிய உடுக்கை வாத்தியம் இசைக்கப்படுவதையும் காண முடியும். (இந்த வாத்தியம் இவ்வாலயத்தில் மட்டுமே உண்டு) குளுத்தி விழா நடைபெறும் இரவு விசேட நாளாகக் கருதப்படும். அன்று அதிகாலை நேரத்தில் குளுத்திப் பாடல்களை முறைப்படி இருவர் சேர்ந்து இராகத்தோடு பாடுவர். குளுத்துப் பாணக்கத்தை, சாதம், கறிபலகாரங்கள், பழங்கள் சேர்ந்த உணவு, அனைவருக்கும் கொடுத்த பின் குளுத்தி விழா, நிறைவு பெறும். இவ்வாறு இவ்வாலயச் சடங்கை அறிந்து கொள்ள முடியும். வற்றாப்பளை கண்ணகியம்மன் ஆலயமானது முல்லைத்தீவு

மாவட்டத்தின் வற்றாப்பளை என்ற கிராமத்தில் அமைந்துள்ளது. அடங்காப்பற்று என அழைக்கப்படும் இவ்வன்னிப்பிரதேசத்தை வன்னிமைகள் ஆட்சி செய்த போது பரிபாலிக்கப்பட்ட இவ்வாலயத்தை போர்த்துக்கேச தளபதி நெவில் என்பவன் அழிக்க முற்பட்டவேளை ஆலயத்தில் நின்ற பன்னிச்சை மரம் தனது காய்களை வீசி, அழிக்க விடாது தடுத்த அற்புத வரலாற்றை ***'பன்னிச்சை ஆடிய பாடற்சிந்து'*** மூலம் அறியலாம். இவ்வாறு வரலாற்றுப் பெருமை மிக்க ஆலயத்தில் முன்னைய காலங்களில் கட்டாடிமார் என அழைக்கப்படுகின்ற உடையார் பரம்பரையில் வந்தவர்கள் சடங்குகளைச் செய்தனர். இன்று ஆராதனை, அலங்காரம், வேதபாராயணம் என்பவற்றை அந்தணர்களே செய்கின்றனர். ஆகம முறைக்கு மாற்றம் பெற்றாலும் வைகாசிப் பொங்கல் சடங்கு, சிறப்பான அம்சமாக நடைபெறுகின்றது. பொங்கல் பற்றி அயற் கிராமங்களுக்கு அறிவிக்கும் பாக்குத் தெண்டல் நிகழ்வும் முல்லைத் தீவு சிலாபத்துறைக் கடலிலிருந்து மண்முட்டிகளில் நீர் எடுத்து ஊர்வலமாக தீர்த்தக் குடம் வருதலும், இக்குடங்களுடன் அருகிலுள்ள காட்டு விநாயகர் ஆலயத்துக்குக் கொண்டு சென்று கடல் நீரில் விளக் கேற்றுதலும், பின் சிலம்பு கூறலைப்படித்து பறை, உடுக்கு என்பவற்றைப் பயன்படுத்தி இசை வழங்கி கண்ணகி அம்மன் ஆலயத்திற்குள் கொண்டு வந்து கண்ணகியம்மன் ஆலயத்தில் கடல்நீரில் விளக்கேற்றியும் மகிழ்வர்.

கச்சுநேரல், மடைபரவுதல், கட்டுச் சொல்லுதல் நிகழ்ந்த பின் வளந்து (பொங்கல் பானை) நேரல் இடம்பெறும். வளந்து நேர்ந்தவுடன் ஆலயவீதி எங்கும் பல்லாயிரக் கணக்கான பொங்கல் பானைகள் அடுப்பில் ஏற்றப்படும். பொங்கல் பொங்கியபின் தூளி பிடித்தல், திருக்குளுத்தி பாடுதல், அம்மானை பாடுதல், மஞ்ச த்தில் எழுந்தருளி கண்ணகி அம்மன் பவனி வருதல் என்பவற்றுடன் வைகாசியில் பொங்கல் நிறைவடையும். கட்டாடிமார் மரபில் வந்த பக்த ஞானி என்பவருக்குரிய பொங்கல் 'பக்த ஞானியார் பொங்கல்' என்ற பெயரில் அடுத்த வரும் வெள்ளிக்கிழமை நடைபெறும். பொங்கல் வேளையின் பின் வட்டக்களரியில் கோவலன் கூத்து ஆடப்படுவதுடன் கும்மி, கோலாட்டம் போன்ற கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

மேற்கூறப்பட்ட ஆலயங்களைத் தவிர சுதுமலை கண்ணகி அம்மன் ''தாங்கு சங் களை'' என்னும் பெயரிலும் மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகி அம்மன் ''பங்குனித் திங்கள் '' என்ற பெயரிலும் வழிபட்டுவந்தாலும் நாவலர் வழி வந்தோர்களினால் இவ்வழிபாடு முறைகள் பெரிதும் பின்பற்றப்படவில்லை என்றே கூறலாம். இவ்வாறு இலங்கையில் சடங்கை அடிப்படையாகக் கொண்ட இக்கண்ணகி வழிபாட்டின் பெருமைக்கு ஜேதவனராமத்து அருங்காட்சியகத்திலே காணப்படும் கண்ணகியின் இரு படிமங்கள் தக்க சான்றுகளாகும். இவ்வாறாக கண்ணகியம்மனை வழிபட்டால் தீராத நோய்கள் நீங்கும்; வேளாண்மை சிறக்கும்; ஆடுமாடுகள் பெருகும்; என்ற நம்பிக்கை, இன்னும் இலங்கைவாழ் சைவத் தமிழ் மக்கள் வாழ்வுடன் இணைந்துள்ளது.

## பாடச் சுருக்கம்

கிராமிய பெண் தெய்வங்களுள் இவளும் ஒருத்தியாவாள்.

முதலாம் கஜபாகு மன்னனால் அறிமுகப்படுத்தப்பட்டது.

கண்ணகியம்மனுக்கான கோயில்கள் பல, வடக்கு கிழக்குப் பகுதிகளில் உண்டு.

சிங்கள பௌத்த மக்களாலும் பத்தினி என்ற பெயரால் வழிபடப்படுகின்றாள்.

சடங்கின் மூலம் பெரிதும் வழிபடப்படுகின்றாள்.

பிரதேச ரீதியான கண்ணகியம்மன் சடங்குகள் வேறுபட்டன.

ஆண்டு தோறும் வைகாசி மாதத்தில்தான் கண்ணகியம்மன் சடங்குகள் இடம்பெறும்.

## பயிற்சிகள்

பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. இலங்கைக்குக் கண்ணகியம்மன் வழிபாடு யாரால் அறிமுகப்படுத்தப்பட்டது
2. கண்ணகியம்மன் வழிபாட்டுச் சடங்குகள் பற்றி அறிய உதவும் நூல்கள் சில தருக
3. வடக்கில் காணப்படும் பிரதான கண்ணகியம்மன் ஆலயங்கள் நான்கினையும் கிழக்கில் காணப்படும் கண்ணியம்மன் ஆலயங்கள் நான்கினையும் பெயரிடுக.
4. காரைதீவு கண்ணகியம்மன் ஆலயத்தில் படிக்கப்படும் சடங்கு எத்தகையவை?
5. வற்றாப்பளை கண்ணகி அம்மன் பூசகர் எவ்வாறு அழைக்கப்படுகின்றார்?
6. கண்ணகியம்மன் படிமங்கள் இரண்டு காணப்படும் இடம் யாது?
7. கண்ணகியம்மன் வழிபாட்டால் ஏற்படும் நன்மைகள் இரண்டு தருக.

## செயற்பாடு

**''கண்ணகியம்மன் சடங்கு''** என்ற தலைப்பில் 5 நிமிடமளவில் வகுப்பறையில் பேச்சொன்றை நிகழ்த்திக் காட்டுக.

## செயற்பாடு

'கண்ணகியம்மன் சடங்கு' என்ற தலைப்பில் குழுவாகச் செயற்பட்டு, வகுப்பறையில் வில்லிசை ஒன்றை நிகழ்த்திக் காட்டுக.

## ஆ. நாகதம்பிரான் சடங்கு

இலங்கையில் வழிபடப்படுகின்ற கிராமிய ஆண் தெய்வங்களுள் நாகதம்பிரானும் ஒருவன். இவ்வழிபாடு இலங்கையின் ஆதிக்குடிகளான ***'நாகர்'*** என்பவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட வழிபாடாகும். அன்று தொடக்கம் இன்று வரை இவ்வழிபாடு இலங்கைவாழ் சைவத் தமிழ் மக்களால் பின்பற்றப்பட்டு வருவதைக் காண முடிகிறது. இவ்வழிபாடு, சடங்கை அடிப்படையாகக் கொண்டு, வழிபட்டு வருவதற்கு ஆங்காங்கே காணப்படுகின்ற நாகதம்பிரான் ஆலயங்கள் சான்றாகும். அத்துடன் இவ்வழிபாடு தொன்மையானது என்பதற்கு ***'நாக'*** எனத் தொடங்கும் ஊர்ப் பெயர்கள் நாக எனத் தொடங்கும் ஆண் பெண் பெயர்கள் ***'நாக'*** என்னும் தொடங்கும் பழ மொழிகள் வீட்டிற்குவரும் நாகத்தை வணங்குதல் நாகத்தைக் கொல்லுதல் பாவம், நாகக்கடி மந்திரிப்பு, நாகத்திடம் நாகரத்தினம் உண்டென நம்புதல் போன்றன சான்றுகளாகும்.

நாகர்களால் தொடங்கப்பட்ட இவ்வழிபாட்டைப் பின்வருமாறு பிரித்துக் கொள்ளலாம். அவையாவன

1. தனிக்கோயில் வழிபாடு
2. அரசு வேம்பு மரத்தடி நாகவழிபாடு
3. பாம்புப் புற்று வழிபாடு
4. தலவிருட்ச நாக வழிபாடு
5. பிள்ளையார் பக்க வழிபாடு
6. இல்ல நாக வழிபாடு என்பன அவையாகும்.

இவற்றுள் தனிக் கோயில் வழிபாடே இலங்கையில் முக்கியத்துவம் வாய்ந்த நாக வழிபாடாகக் காணப்படுகின்றது. ஏனையவை கிராமமக்களின் குல தெய்வமாக நம்பிக்கைகளின் அடிப்படையில் வழிப்படுகின்ற முறை என்று கூறிக் கொள்ளலாம். தனிக் கோயில் வழிபாட்டு முறையில் பிரதேச ரீதியாகப் பல நாகதம்பிரான் ஆலயங்களை நாம் இனங்கண்டு கொள்ளலாம். அவற்றுள் யாழ்ப்பாணம் வடமராட்சி நாகர் கோயில், நாகதம்பிரான் ஆலயம், கிளிநொச்சி புளியம் பொக்கணை நாகதம்பிரான் ஆலயம், வவுனியா புதூர் நாகதம்பிரான் ஆலயம், திருகோணமலை சோனையூர் நாகதம்பிரான் ஆலயம், மட்டக்களப்பிலுள்ள பண்டாரவெளி நாகதம்பிரான் ஆலயம் என்பன குறிப்பிடத்தக்கன. இவற்றைவிட கோட்டைக்கல்லாறு பழுகாமம், மண்டூர், கிண்ணையடி போன்ற இடங்களிலும் நாகதம்பிரான் ஆலயங்கள் உள்ளன. இவ்நாகதம்பிரான் ஆலயங்கள் ஒவ்வொன்றிற்கும் கர்ணபரம்பரைக் கதைகள் உண்டு. அதனடிப்படையில்தான் நாகதம்பிரான் சடங்குகள், அன்று தொடக்கம் இன்று வரை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நாகதம்பிரான் ஆலயங்களின் சடங்குகள் பெரும்பாலும் ஒத்த தன்மைகளைக் கொண்டனவாகவே காணப்படுகின்றன. பெரும்பாலான ஆலயங்களில் ஆகம நெறிக்குட்படுத்தப்பட்ட கிரியைகள் பிராமணர்களால் நிகழ்த்தப்படினும் சடங்குகளும் நடைபெறுவதை அவதானிக்கலாம். நாகதம்பிரான் சடங்குகள் என்னும்போது

மடைப்பண்டம் எடுத்தல், மடைபரவுதல், பாம்பு குடியிருக்கும் புற்றுக்குப் பால் வார்த்தல், பொங்கல் வைத்தல், வழிவெட்டுதல் என்பன இடம் பெறும். பெரும்பாலும் நாகதம்பிரான் சடங்குகள் ஆண்டு தோறும் வைகாசி ஆனி மாதத்திற்குள் நடைபெறும். இதற்கு மட்டக்களப்பு பண்டாரியா வெறி நாகதம்பிரான் ஆலயத்தின் சடங்குகளை அடிப்படையாகக் கொண்டு பார்க்கலாம். பண்டாரியாவெறி நாகதம்பிரான் ஆலயப் பொங்கல் கர்ணபரம்பரைக்கதை வழியில் வந்த கொம்பிக் கிழலார், குத்துவார் காலிங்கா குடி என அழைக்கப்படுவர்களே பூசைகளைச் செய்கின்றனர். ஆனி உத்தரத் தினத்தன்று இங்கு பொங்கல் இடம்பெறும். நாகத்திற்கு வெண்ணிறப் பொங்கல், பால், பழம் கதைத்து வார்த்தல், முட்டை வைத்தல் என்பன இடம் பெறும் பால் பழம் களாத்து புகுதல் வார்த்தப் பிரேக்க வழிபாட்டுடன் தொடர்புபட்டதாகவும் நாகத்திற்கு முட்டை வைக்கும் வழக்கம் தமிழ் நாட்டுடன் தொடர்புபட்டதாகவும் உள்ளன. எனினும் இக்கோயிலில் நேர்த்திக் கடனாக முட்டை கொடுப்பதேயன்றி முட்டையை உடைத்து நாகத்திற்கு கொடுக்கும் வழக்கம் தற்போது இல்லை என்றே கூறலாம்.

பண்டாரவெளி நாகதம்பிரான் ஆலயத்தைவிட கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை புளியம் பொக்கனை நாகதம்பிரான் ஆலயம் பிரசித்தி பெற்ற நாகதம் பிரான் ஆலயமாகக் காணப்படுகின்றது. இந்த ஆலயத்திற்கும் கர்ண பரம்பரைக் கதை உண்டு. அதனடிப்படையில் ஆண்டு தோறும் பங்குனி உத்தரத்தன்று வருடப் பொங்கல் இடம் பெறுகின்றது. விளக்கு வைப்பு என்னும் சடங்கு பொங்கலுக்கு ஒரு வாரத்திற்கு முன் நடைபெறும். அன்று நாகதம்பிரானுக்கு விசேட அபிஷேக ஆராதனைகள் இடம் பெற்று, பிரம்பு வழங்கும் வைபவமும் இடம் பெறும். தொடர்ந்து ஏழு நாட்கள் பூசைகள் நடைபெற்று, பாரம்பரிய முறைப்படி பொங்கலன்று மீசாலை புத்தூர்ச் சந்தியிலிருந்து பண்டம் எடுத்துவரப்பட்ட பின்பே பொங்கல் நடைபெறும். இக்கோயிலின் பூசையை நீதிநாயக முதலியார் பரம்பரையில் வந்தோர்களே இன்றுவரை செய்து வருகின்றனர். இந்த ஆலயத்தில் நாகபடம் வைத்து வழிபடுவதும் பாம்புக்குப் பால் வார்த்தல் போன்ற சடங்கு ரீதியான வழிபாட்டு முறைகளே இன்றும் நடைமுறையிலுண்டு எனக் கூறிக் கொள்ளலாம்.

மேற்கூறப்பட்ட நாகதம்பிரான் தனிக் கோயில் வழிபாட்டுச் சடங்குகள் நிகழ்த்தப்படும் அதே வேளை அரசு, வேம்பு, மரத்தடி வழிபாடு, பாம்புப் புற்று வழிபாடு, தல விருட்ச வழிபாடு, பிள்ளையார் பக்க வழிபாடு, இல்ல நாக வழிபாடு என்பனவும் வழக்கிலுள்ளன. யாழ்ப்பாணக் குடா நாட்டின் கிராமங்கள், வன்னிப்பிரதேசம், கிழக்கிலங்கைக் கிராமங்களில் இன்றும் புற்றுக்கு பால்வார்த்தல், பால், பழம் வைத்தல், புற்று மண்ணைப்பூசுதல், கரைத்துக்குடித்தல், போன்ற நடவடிக்கைகளிலும் இப்பிரதேச மக்கள் நம்பிக்கையுடன் வாழ்ந்து வருகின்றனர்.

நாகதம்பிரான் வழிபாட்டில் ஈடுபடும் மக்களின் நம்பிக்கைகள் பலவாகும். பாம்புகள் தீண்டாமலிருத்தல் அப்படித் தீண்டினாலும் அதனால் எத்தீங்கும் நிகழாதிருத்தல் கிருமி சார்ந்த நோய்கள் வராமலிருத்தல், வயல்களிலுள்ள பயிர்களில் கிருமித்தாக்கம் ஏற்படாமல் இருத்தல், மலட்டுத் தன்மை நீங்க குழந்தை பிறத்தல், பிறந்த குழந்தை குறுகிப்போகாமல் வளர்ந்து வருதல், வரட்சி நீங்கி மழை பெருகுதல், வளம்

பெருகுதல் என்பன அவற்றுட் சிலவாகும். அதனால் மாணவர்களாகிய நாமும் சடங்கை அடிப்படையாகக் கொண்ட நாகதம்பிரான் வழிபாட்டைக் கடைப்பிடித்துப் பயன்பெறுவோம்.

### பாடச் சுருக்கம்

நாகர்களால் ஆரம்பிக்கப்பட்ட வழிபாடு நாக தம்பிரான் வழிபாடாகும்.

சடங்கை அடிப்படையாகக் கொண்ட வழிபாடாகும்.

கிராமிய ஆண் தெய்வங்களுள் நாகதம்பிரானும் ஒருவர்.

சடங்கை அடிப்படையாகக் கொண்ட இவ்வழிபாடுகள் ஆறு வகைகளில் வழிபடப்படுகின்றன.

இலங்கையில் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் பெரும்பாலான தனிக் கோயில்கள் நாகதம்பிரானுக்கு உண்டு.

### பயிற்சிகள்

பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. நாகதம்பிரான் வழிபாடு யாரால் அறிமுகப்படுத்தப்பட்டது?
2. நாகதம்பிரான் ஆலயங்களில் இரண்டைப் பெயரிடுக.
3. நாகதம்பிரான் சடங்குகள் இரண்டைத் தருக.
4. நாகதம்பிரான் வழிபாட்டால் ஏற்படும் நன்மைகள் இரண்டைத் தருக.

### செயற்பாடு

**'நாகதம்பிரான் வழிபாடு'** என்ற தலைப்பில் பேச்சொன்றை வகுப்பறையில் நிகழ்த்திக் காட்டுக.

### செயற்பாடு

**'நாகதம்பிரான் வழிபாடு அன்றும் இன்றும்'** என்பதைக் கருப்பொருளாகக் கொண்டு, இரு குழுக்களாகப் பிரிந்து ஆசிரியர் உதவியுடன் வகுப்பறையில் **'விவாதம்'** ஒன்றை நிகழ்த்திக் காட்டுக.